சாட்சிய வாக்குமூலம்
மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,
சிறப்பு அமர்வு வழக்கு எண் 255/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 8(LW-14) | நாள் | 18.02.2026 |
| பெயர் | வெள்ளத்துரை | தொழில் | |
| தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது கூடுதல் காவல் கண்காணிப்பாளராக உள்வட்ட பாதுகாப்பு பிரிவில் சென்னையில் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 26.12.2018ல் மயிலாடுதுறை துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது பாலையூர் காவல் நிலைய ஆய்வாளர் பதிவு செய்த பாலையூர் காவல் நிலை குற்ற எண். 17/2019, ச/பி. 452, 294(b), 324, 352, 427 of IPC & 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST Act - 2015 என்ற வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக என்னை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் C. No. 03/SJ&HR/2019, Dated: 18.01.2019 நியமித்து வந்த உத்தரவின்பேரில் இவ்வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இட சாட்சிகளான கவியரசன், விஜயதாஸ் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். அந்த **மாதிரி வரைபடம் அசாஆ 5, பார்வை மகசர் அசாஆ 6** ஆகும். அதே சாட்சிகள் முன்னிலையில் சுமார் 50 செமீ நீளமுள்ள இரும்பு பைப் அது **சாபொ 1** ஆகும். 60 செமீ நீளமுள்ள மரரீப்பர் அது **சாபொ - 2** ஆகும். சுமார் 60

செமீ மரக்கட்டைகள் இரண்டு அது **சாபொ – 3 மற்றும் 4** ஆகும். இருசக்கர வாகனத்தின் உடைந்த Scoop அது **சாபொ – 5** ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த **கைப்பற்றுதல் மகசர் அசாஆ 7** ஆகும். தயார் செய்தேன். பின்னர் அங்கிருந்து மயிலாடுதுறையில் உள்ள அரசு பெரியார் மருத்துவமனைக்கு சென்று புகார்தாரரான அறிவழகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு 19.01.2019 அன்று இதர சாட்சிகளான திலகவதி, சமுத்திரம், முருகன், கருணாநிதி, உமா, கலைமதி, கவியரசன் மற்றும் விஜயதாஸ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விசாரணையில் சரத் என்பவருக்கு பதிலாக யோக பிரகாசம் என்பவர் வழக்கில் தொடர்புடையவர் என்று தெரியவந்ததில் அவரை வழக்கில் இணைத்து தனியறிக்கை நீதிமன்றத்தில்தாக்கல் செய்தேன். அந்த **தனியறிக்கை அசாஆ 8** ஆகும். மேலும் எதிரிகளை தேடிவந்த நிலையில் எனக்கு கிடைத்த தகவலின்பேரில் கந்தமங்கலம் மெயின்ரோட்டில் உள்ள பஸ் நிறுத்த அருகில் நின்றிருந்த யோகபிரகாசம் என்பவரை 19.01.2019 அன்று மதியம் 2.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்து உரிய நடைமுறையை பின்பற்றி நீதிமன்ற காவலுக்கு அனுப்பினேன். 20.01.2019 அன்று அறிவழகன், திலகவதி ஆகியோரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்து நீதிமன்றதிற்கு அனுப்பினேன். 21.02.2019 அன்று காயச்சான்று வழங்கிய மருத்துவர் ஸ்ரீதர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த **காயச்சான்று அசாஆ 9** ஆகும். பிறகு இதர எதிரிகளான செந்தில்குமார், சரவணன், பிரேம்குமார் ஆகியோர் 25.02.2019 அன்று அமர்வு நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் சென்ற விவரத்தை தெரிந்து கொண்டேன். பிறகு புகார்தாரர் அறிவழகன் மற்றும் சாட்சிகள் திலகவதி,

சமுத்திரம் ஆகியோருக்கு சாதி சான்று வழங்கிய குத்தாலம் தாசில்தார் ஸ்ரீதர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவை முறையே **அசாஆ 10 முதல் 12** ஆகும். பிறகு எதிரிகள் செந்தில்குமார், சரவணன், பிரேம்குமார், யோகபிரகாசம் ஆகியோருக்கு சாதி சான்று வழங்கிய குத்தாலம் துணை வட்டாட்சியர் ஜெனிட்டாமேரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளுக்கு வழங்கிய **சாதி சான்றுகள் முறையே அசாஆ 13 முதல் 16** ஆகும். பின்னர் இந்த வழக்கு விசாரணையை முடித்து 28.05.2019 அன்று எதிரிகள் மீது ச/பி. 452, 294(b), 324, 352, 427 of IPC & 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST Act ன்கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கும் செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரிக்கமால் எதிரிகள் மீது வாதி கொடுத்த பொய்யான புகாரை பெற்றும் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் யாரும் நான் சொன்ன விவதத்தில் சொன்னபடி விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. புள்ளி விவரத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மயிலாடுதுறை